## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

**CC No.6/2016**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 3 |
| Name | : Thiru.Arumugam |
| Father's Name | : சிங்காரவேலு |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2021.

**முதல் விசாரணை -**

நான் உத்திரமேரூரில் வசித்து வருகிறேன். நான் ஓல்டு எஸ்எஸ்எல்சி படித்துள்ளேன். கடந்த 1977 ஆம் ஆண்டு நான் சென்னைக்குச் சென்று நம்பர் 44, கச்சேரி ரோடு, மயிலாப்பூர் என்ற விலாசத்தில் இயங்கி வந்த என் அண்ணிக்குச் சொந்தமான யோகம்ஸ் பெட்டிங் கம்பெனியில் பங்குதாரராக சேர்ந்து வியாபாரம் செய்து வந்தேன். அதன்பிறகு நான் திருமணம் செய்து கொண்டேன். திருமணத்திற்குப் பிறகு எண் 3, வடகூர் செல்வவிநாயகர்கோயில் தெரு, மயிலாப்பூரில் நானும் எனது மனைவியும் வசித்து வந்தோம். அந்த சமயத்தில் எனது தூரத்து உறவினர் அக்கா முறையான கஸ்தூரி தான் சிங்கபெருமாள் கோயில் அருகில் உள்ள கொளத்தூரில் பிளாட் வாங்க போவதாகவும், என்னையும் வாங்கச் சொல்லியும் சொன்னார். எனது அக்கா கஸ்தூரி பொன்னியம்மன் நகரில் பிளாட் எண் 13 மற்றும் 14 ஐயும் நான் அதே பொன்னியம்மன் நகரில் பிளாட் எண் 11 மற்றும் 12 ஐயும் வாங்கினோம். எந்த வருடம் என்று ஞாபகமில்லை. பிளாட் நம்பர் 11 மற்றும் 12 தலா 2400 சதுர அடியாகும். மொத்தமாக 4800 சதுர அடியை நான் ருக்மணியம்மாளிடமிருந்து கிரையம் பெற்றேன். நான் கடந்த 1991 ஆம் வருடம் எனது அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் உத்திரமேருக்கு அருகில் உள்ள கம்மாளம்பூண்டிக்கே திரும்ப வந்து விட்டேன். அங்கு விவசாயம் செய்து வந்தேன். அதன்பிறகு 2001 முதல் 2005 வரை கம்மாளம்பூண்டியில் ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகித்து வந்தேன். நான் டிராக்டர் வாங்க வேண்டும் என்ற காரணத்திற்காக எனக்கு சொந்தமான பிளாட் நம்பர் 11 மற்றும் 12 ஐ எனது மனைவியின் தம்பி மாமியார் மூலம் இடத்தை திருப்போரூர் அருகே உள்ள தண்டலம் கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருவதாகவும் அவர் மூலமாக நிலத்தை விற்றுக் கொடுக்க முடிவு செய்தேன். நான் அவரை அணுகிய போது என்னுடைய பத்திரத்தின் நகலை கொடுத்து நிலத்தை விற்கச் சொன்னேன். ஆனால் அவர் 10 நாளில் நிலத்தை விற்றுக்

கொடுப்பதாக சொல்லி என்னுடைய அசல் ஆவணத்தை திரு.முருகேசனிடம் கொடுத்து விட்டார். ஆனால் முருகேசன் சொன்னபடி நிலத்தை விற்றுக்கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்தார். நான் பலமுறை அவரிடம் கேட்டும் இப்பொழுது, அப்பொழுது என்று காலம் தாழ்த்தி வந்தார். நான் என்னுடைய மச்சான் மாமியாரிடமும் இதுபற்றி கூறினேன். அவரிடமும் முருகேசன் நிலத்தை விற்றுக் கொடுப்பதாக சொல்லி காலம் தாழ்த்தி வந்தார். அதன்பிறகு நான் முருகேசனை நேரடியாக அணுகி கேட்டபொழுது கூடுவாஞ்சேரியைச் சேர்ந்த சரவணன் என்பவர் மூலமாக என்னுடைய நிலத்தை விற்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார். நான் சரவணனை நேரடியாகப் பார்த்ததில்லை. முருகேசன்தான் சரவணன் மூலமாக இடத்தை விற்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார். இது சம்பந்தமாக முருகேசனை மறுபடியும் அணுகியபோது அவர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் என்னுடைய அசல் ஆவணத்தையும் திருப்பிக் கொடுக்காமல் என்னை மிரட்டினார். இது சம்பந்தமாக நான் சென்னையிலுள்ள என் அக்கா கஸ்தூரியிடம் சொன்னேன். அவரும் அவருடைய இடமான பிளாட் நம்பர் 13 மற்றும் 14 ஐயும் விற்பதாகச் சொன்னார். என்னுடைய இடத்தையும் விற்று விடலாம் என்று சொன்னார். நான் என்னிடம் அசல் ஆவணம் இல்லை என்று சொன்னதற்கு பதிவாளர் அலுவலகத்திலிருந்து பதிவு பெற்ற நகல் வைத்து விற்றுவிடலாம் என்று சொன்னார். நான் செங்கல்பட்டு பதிவாளர் அலுவலகத்தில் ஆவண நகல் பெற முற்பட்டபொழுது என்னுடைய இடம் என்னுடைய பெயர் கொண்ட போலியான நபரை வைத்து ஆள்மாறாட்டம் செய்து சரவணன் என்பவருக்கு ஒரு பொது அதிகாரப் பத்திரம் பதியப்பட்டு அதன்மூலம் என்னுடைய விற்பனை செய்யப்பட்டுள்ளது எனக்க தெரியவந்தது. பொதுஅதிகாரம் பெற்ற சரவணன் அவருடைய மனைவி ராஜலட்சுமி பெயரில் எனக்கு சொந்தமான நிலத்தை விற்று பதிவு செய்தது எனக்கு தெரியவந்தது. நான் இது சம்பந்தமாக உத்திரமேரூரில் உள்ள எனக்கு தெரிந்த வழக்கறிஞர் மூலமாக மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம், காஞ்சிபுரத்தில் புகாரை நேரடியாகக் கொடுத்தேன். அதன் பிறகு போலிசார் நடவடிக்கை எடுத்து எதிரிகள்மீது வழக்கு தொடுத்து இது சம்பந்தமாக காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சரவணனை விசாரித்தபொழுது அவருடைய மனைவி ராஜலட்சுமி அக்கா, தங்கையான 2 பேருக்கு என்னுடைய இடத்தை விற்றுவிட்டதாகவும் அதில் ஒரு இடத்திற்கான பணத்தை பெற்றுக் கொண்டதாகவும் மற்றொரு இடத்திற்கான பணத்தை பெறவில்லை என்றும் காவல் துறையிடம் சொன்னார். போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள். என்னுடைய கைரேகையை போலிசார் பெற்றுக் கொண்டார்கள்.

**குறுக்கு விசாரணை** - 2, 3, 4, 5 ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. 1 ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.